செ.வெ.எண்:73 நாள்:8.12.2017

# பத்திரிக்கை செய்தி

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அவர்களின் செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியர்களுக்கு 2017-2018ஆம் ஆண்டிற்கான கல்வி உதவித்தொகை வழங்க தகுதியான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றது.

சாதாரண பள்ளிகளில் பயிலும் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கீழ்காணும் விபரப்படி கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டு வருகிறது.

அதன்படி நடப்பு கல்வி ஆண்டிற்கு 1முதல் 5 வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு ரூ.1000/- மும், 6 முதல் 8ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு ரூ.3000/-மும் 9முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு ரூ.4000/-மும், பட்டப்படிப்பு பயில்பவர்களுக்கு ரூ.6000/-மும், தொழிற்கல்வி பயில்பவர்களுக்கு ரூ.7000/-மும், வழங்கப்படுகின்றது.

மேலும் பார்வையற்றோருக்கான 9 முதல் 12ஆம் வகுப்பு வரை பயிலும் மாணாக்கர்களுக்கு வாசிப்பாளர் உதவித்தொகையாக ரூ.3000/-மும், இளங்கலை பட்டம் பயில்பவர்களுக்கு ரூ.5000/-மும், பட்டப்படிப்பு பயிலும் பார்வைத்திறன் குறையுடைய மாணாக்கர்களுக்கு ரூ.6000/-மும் வாசிப்பாளர் உதவித்தொகையாக வழங்கப்படுகிறது. கல்வி உதவித்தொகை பெற கீழ்கண்ட ஆவணங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

1. மாற்றுத்திறனாளிகளுக்கான தேசிய அடையாள அட்டை.
2. 9ஆம் வகுப்பு மற்றும் அதற்கு மேல் பயில்பவர்கள் கடந்த கல்வியாண்டு

   இறுதித்தேர்வில் அனைதது பாடங்களிலும் 40% மதிப்பெண் சான்று.
3. தேசிய மயமாக்கப்பட்ட வங்கி கணக்கு புத்தக நகல்.

2017-2018ஆம் நிதியாண்டிற்கு கல்வி உதவித்தொகை பெற இதுவரை விண்ணப்பிக்காத இம்மாவட்டத்தில் பயிலும் மாற்றுத்திறனாளி மாணவ மாணவியர்கள் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகத்தில் (மேலு் விபரங்களுக்கு தொலைபேசி எண்: 0461-2340626 விண்ணப்பங்களை வருகின்ற 31.12.2017 தேதிக்குள் உரிய சான்றுகளுடன் விண்ணப்பித்து பயனடைய தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.என்.வெங்கடேஷ் , இ.ஆ.ப அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.